## தலைப்பு 025 - எல்லை நிர்ணய ஆணைக்குழு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 025 - எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான மீளாய்வொன்றினை மேற்கொண்டு, தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான உறுதிப்படுத்தலொன்றல்ல. தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்

தொடர்பான அறிக்கை 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,
(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

## 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50 ஆனது சரியான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் வேண்டப்பட்டதுடன் நிதிப் பிரமாணம் 127(5) அனது மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டு தொகைக்கும் செலவின விடயங்களிற்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கும் இடையிலான குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்களை தடுப்பதற்கும் வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு எல்லை நிர்ணய தேசிய குழு உள்ளது. 10 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு முலதன செலவின விடயம் என்பவற்றில் 12 சதவீதத்திலிருந்து 2000 சதவீதம் வரை பாதிட்டு ஒடுக்கீட்டின் செலவினம் அதிகரித்திருந்தமையால் செலவினங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் செய்யப்பட்டது. | உள்ளுராட்சி எல்லை நிர்ணயிப்பிற்காக தேசிய குழுவிற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் காரணமாக நேரொத்த அதகரிப்புகள் உள்ளது. | 2023 ஆண்டு பாதீடு தயாரிக்கும் பொது சுற்றிக்கை 03/2022 கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 50 இற்கு அமைய செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 செலவின விடயங்களிற்கான குறைநிரப்பு மதிப்பீட்டில் குறித்தோதுக்கப்பட்ட ரூபா 1,088,000 ஆன மொதடத ஏறடபாடுகளும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உள்ளுராட்சி எல்லை நிர்ணயிப்பிற்காக தேசிய குழு சார்பில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் நேரொத்த குறைநிரப்பு மதிப்பீடுகளாக உள்ளது. விற்காக | செலவின தேவைகள் சரியாக எதிரவு கூறப்பட வேண்டியதுடன் குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக நிதிகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (இ) | 05 செலவின விடயங்களின் திருத்தத்திற்காக செய்யப்பட்ட ரூபா 10,203,060 இல் ரூபா 3,051,927 ஆன மொத்தம் திருப்பி அனுப்பப்பட்டதுடன் தேறிய சேமிப்புகள் 17 சதவீத்திலிருந்து 50 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | 2024.01.10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் சேமிப்புகள் உள்ளுராட்சி எல்லை நிர்ணயிப்பிற்காக தேசிய குழுவிற்காக செய்யப்பட்ட ஏற்பாடு செலவின வரையறை காரணமாக இருந்தது. | 2023 ஆண்டு பாதீடு தயாரிக்கும் பொது சுற்றிக்கை 03/2022 கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 50 இற்கு அமைய செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடமைகளின் நிலை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 சனவரியில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு மீதான பரீட்சிப்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக ரூபா 5,761 ஆன தொலைபேசி பட்டியல் கொடுப்பனவு நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஏற்பட்ட அத்தகைய குறைபாடுகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தனர். | மீளாய்வாண்டிற்கான சகல பொறுப்புகளும் ஏற்பட்ட பொறுப்புக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் மாதிரி செவ்வையின் பொது அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள் வதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாயவு செய்யப்பட்டுள்ளன.

**அவதானிப்பு**

| | கட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரைவு செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அடுத்தவரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | அதிகாரச்சட்டதின் பிரகாரம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஆணைக்குழு மீளாய்வாண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரித் திருக்கவில்லை. | 2018/02 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிரகாம், மனித வளத் திட்டம் அரசியலமைப்பின் 95(1) ஆம் உறுப்புரையால் ஒதுக்கப்பட்ட பணிகளை விட வேறெந்த குறித்து ஒதுப்படாத பணிகளாக விருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்படுகளிற்கமைய செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் வழங்கப்பட்ட படிவத்திற்கு அமைய ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளில் உரிய அலுவலகங்கள் 2020 ஆகஸ்ட் ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கமைய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையிலுள்ள படிவத்திற்கமைய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 16 இலக்குகளில் 14 பௌதீக இலக்குகள் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அடுத்துவரும் ஆண்டுகளின் பௌதீக இலக்குகளை குறிப்பிட்டு காட்டுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் ஒவ்வொரு இலக்குகளிற்காகவும் பௌதீக இலக்குகள் குறித்துக் காட்டப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழு 2015 இல் தாபிக்கப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் தொகுதியின் ஒதுக்கீடு என்பன அரசியலமைப்பு சட்டத்தில் தெளிவுபடுத்தியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் அதிகாரம் தொடர்பில் எவ்வித விளங்கங்களும் இருக்கவில்லை. ஆணைக்குழுவிற்கு பணிகள் எதுவும் ஒதுக்கப்பிடிருக்காத போதிலுத் ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தால் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 27,041,060 ஆன ஏறபாடுகள் ஒதுக்கபபட்டிருந்ததுடன் ரூபா 21,293,574 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு பணிகள் எதுவும் ஒதுக்கப்படாத பொதிலும் ஆணைக்குழு தற்போது எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொர்பில் தேவையான தரவுகளை சேரித்தல், இருக்கின்ற தரவுகளை நாளது வரைக்குதல், அதேபோல உலகளாவிய எல்லை நிர்ணயிப்பில் செய்யப்பட்ட வேலைகள் மீது நடாத்தப்பட்ட கற்கைகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ளது, பல சந்தர்ப்பங்களில், குறித்த பணிகளை வழங்குவதற்கு செய்யப்பட்ட வேண்டுகைகளிற்காக எவ்வித பதில்களும் பெறப்படவில்லை. ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டததால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு 2023 ஆம் ஆண்டில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின சம்பளங்கள் மற்றும் அவசியமான மீண்டெழும் | ஆணைக்குழு குறித்த பணிகள் மற்றும் அதிகாரம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பதன் தாக்கம் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினங்களிற்காக ஒதுக்கப் பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவிற்கு குறித்த பணிகள் எதுவும் ஒதுக்கப்படாத போதிலும் ஆணைக்குழு எதிர்காலத்தில் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பான பணிகளிற்காக தகல்கள் மற்றும் தரவுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 இலிருந்து சனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் ஆணைக்குழுவின் வேலைகளிற்காக பயன் படுத்தப்பட்டிருந்தது. இந்த இரண்டு வாகனங்களும் 2024 மார்ச் 31 ஆன கணக்காய்வு திகதி வரையும் ஆணைக்குழுவிற்கு கையளிகக்ப் பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் ஆணைக்குழு அந் இரண்டு வாகனங்களிற்காக ரயர் கொள்வனவு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 1,048,189 ஆன தெகை செலவழித்திருந்தது. | சனாதிபதி செயலகம் அந்த வாகனங்களை கைறேப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வெண்டுமென 2024.04.30 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவித்திரந்தார். அத்துடன் இதன்படி தற்போது மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அநத இரண்டு வாகனங்கள் தொடர்பில் காப்புறுதி மற்றும் வாகன அனுமதிப் பத்திரத்திற்கான ஏற்பாடுகள் மாத்திரம் சனாதிபதி செயலகத்தின் ஏற்பாடுகளன் கீழ் செய்யக்கட்டன. அதேநேரம், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் ஏற்பாடுகளின் கீழ் வாகன திருத்தம் மற்றும் சேவிஸ் என்பன செய்யப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவால் பயன் படுத்திய ஆதனங்களை கையேறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திட்டமிட்ட வேலைகளிற்காக செலவின பாதீடு தயாரிகப்பட வேண்டியதுடன் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 9.1.(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் 05 மாவட்டங்களிலுள்ள ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட எல்லை நிர்ணய குழுக் கூட்டங்களிற்காக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிரக்காததுடன் எரிபொருளிற்காக இரண்டு உத்தியோகத்தர்களிற்கு முறையே ரூபா 55,300 மற்றும் ரூபா 36,081 ஆன செலவினம் ஏற்பட்ட.து. பின்னர் அந்த கூட்டச் செலவினம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தன. | உள்ளூராட்சி எல்லை நிர்ணய குழு சார்பில் சம்பந்தப்பட்ட செலவினம் ஏற்பட்டதுடன் உள்ளூராட்சி எல்லை நிர்ணய குழு அறிக்கை உடனடியாக வழங்குவதற்கான கால எல்லை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அந்த செலவினம் தனியார் நிதிகளால் மீளளிக்கப்பட்டன. | திட்டமிட்ட வேலைகள் மேற்கொள்வதற்கான இடைக்கால முற்பணம் வழங்கப்பட வேண்டிதுடன் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1. பொது மக்களிற்கான சேவையை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 12 ஆம் இலக்க மனித உரிமைகள் அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு நிறுவனம் பற்றி பொது மக்கள் தொடர்புகள், குற்றங்கள் அல்லது தவறுகள் பற்றி பதிவிடுவதற்கு உத்தியோகபூர்வ இணையதளம் வசதியளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | அதிகாரச் சட்டத்திற்கமைய உத்தியோகபூர்வ இணையதளம் பேணப்பட வேண்டும். |

### 4.2. உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொருத்தமாக கணக்காய்வாளராக நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2015 இலிருந்து உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு உள்ளக கணக்காய்வாளர் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிற்கமைய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு மாதத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டப்பட வேண்டும். ஆனால், ஆணைக் குழுவினுடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2015 இலிருந்து நடைபெற்றிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 15 ஆக இருந்தது. ஆனால், உள்ளபடியான பதவியணி 08 ஆக இருந்ததுடன் 07 வெற்றிடங்கள் இருந்தன. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | அத்தியாவசிய பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இலிருந்து பிரதம செயலாளர் மற்றும் கணக்காளர் போன்ற நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டிருக்காததுடன் உத்தியோகத்தர்கள் கடமைகள் ஒப்பந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | அத்தியாவசிய பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |